RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt21s134

# ஓலைச்சுவடிகள் - ஓர் ஆய்வு

## அ. ஸ்ரீதேவி [அ, *]

[அ] தமிழ்த்துறை, நேரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்-641008, தமிழ்நாடு, இந்தியா

# Olaichuvadi Or Aaivu

## A. Sridevi [a, *]

[a] Department of Tamil, Nehru Arts and Science College, Coimbatore-641008, Tamil Nadu, India

* Corresponding Author: a.sridevi4@gmail.com

Received: 04-11-2020
Revised: 16-06-2021
Accepted: 19-06-2021
Published: 21-06-2021

Check for updates

**ABSTRACT**

The sanga noolgal andru Olaichuvadi were sleeping on the yon. In Tamil research, you began to engage in U. V. Swaminatha Iyer. After the disappearance of the disappearance, his home had received 500 running walls. Among them have received ancient texts, including Eight Anthologies, Ten Idylls, Pathinen Keelkanaku, Civaka Cintamani and Konguvel Makkathai. On that time, the account is writing. Talking is the name of the original (trace) written plates. At that time, the king of the king was written by the writer of the writer and their leader of their leader. There is a man who calls a message that has come to say that the wedding messages are Magnificent. Round-shaped characters are written only in writing writing. Tamil, Kirtham, Malayalam, Hangathari, Nandinagari, Kannada, Telugu, Oriya, Sinhala, Burmese and Thai. Initially does not point in the Tamil writings Later in 1850, you can see the point in the traces. I want to ask for today's generations to try to study or protect our wealth in the destruction of my inspection and endorses.

**Keywords:** Olaichuvadi, Thirumandira Olai, Olay Nayakam, U. V. Swaminatha Iyer.

## முன்னுரை

### டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர்

சங்கநூல்கள் அன்று ஓலைச்சுவடியில் உறங்கிக் கொண்டு இருந்தன. தமிழ் ஆராய்ச்சியில் உ.வே. சாமிநாதர் ஈடுபட தொடங்கினார் (Venkatachalapathy, 2018). தமிழ் ஏட்டுச் சுவடிகளை ஊர்தோறும் சென்று தேடும் பணியில் ஈடுபட்டார். மடத்திலும், புலவர்களிடமும், ஊர்களிலும் சென்று அலைந்து திரிந்து ஏடுகளைப் பெற்றுத் திரட்டினார். சிலரிடம் கெஞ்சி, நயந்து சுவடியைப் பெற்றார்.

திருப்பாற்கடனாத கவிராயர் மறைவிற்கு பிறகு அவரது வீட்டில் 500 ஓலைச் சுவடிகள் கிடைத்தன. அவற்றுள் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்கணக்கு, சிந்தாமணி, கொங்குவேள் மாக்கதை உள்ளிட்ட பழமையான நூல்கள் கிடைத்தன.

சேலம் இராமசாமி முதலியாரிடம் பெற்ற (சீவக சிந்தாமணியை முதன் முதலில் பதிப்பித்த நூலாகும். 1887-அக்டோபர்),

இறுதியில் 1917 ல் திராவிட வித்யாபூஷணம்,

1925 ல் தாக்ஷிணாத்திய கலாநிதி,

1932 ல் இலக்கியப் பண்டாரதர்,

ஆகிய பட்டங்களையும், விருதுகளையும் பெற்றார்.

## சுவடி விளக்கம்

சுவடி என்றாலே நமக்கு ஞாபகம் வருவது ஓலைச்சுவடிதான். தமிழகத்தில் முன்பெல்லாம் முதியோர் கையில் ஓலையும், அரையில் எழுத்தாணியும் வைத்திருந்தனர். வீடுகள் தோறும் ஓலைச்சுவடிகள் இருக்கும்.

அக்காலத்தில் ஓலையில் தான் கணக்கு எழுதுவர். சுவடி என்பது எழுத்துக்கள் பதிமாறு (சுவடு) எழுதப் பெற்ற ஏடுகளில் தொகுப்பு சுவடி எனப் பெயர் பெறுகின்றது.

"பூ வாரடிச்சுவடு என் தலைமேல் பொறித்தலுமே"

- மாணிக்கவாசகர்

"யாதும் சுவடு பாடாமல் ஐயாநடைகின்ற போது"

- திருநாவுக்கரசர்

இதில் சுவடு என்னும் சொல் பதித்தலை உணர முடிகிறது.

## ஓலை சுவடிகளின் தோற்றமும் (வளர்ச்சி)

பழங்காலத்தில் பள்ளிகள் திண்ணைப் பள்ளிக்கூடங்களாக (ஆசிரியரின் வீட்டுத் திண்ணை, சத்திரம், சாவடி, ஊர்மன்றம், கோவில் அல்லது தெருப்பள்ளிக் கூடங்களாக) இருந்துள்ளன. இப்பள்ளியில் படிக்கும் மாணவர்கள் குறைவு. ஒரு சிலர் தனி ஆசிரியர் மட்டும் தனி ஆசிரியரைத் தேடி இலக்கண இலக்கியங்களை கற்பர். தொடக்க காலத்தில் தமக்கு தேவையான நீதி நூல்கள், அந்தாதி, சதகம், மாலை போன்று சமய இலக்கியங்களையும் எழுதியிருந்தனர்.

எ. கா: - நக்கீரரின் (இறையனார் களவியல் உரை)

பன்னிரண்டு தலைமுறைகளாக வாய்மொழிப் பாடமாகவே வளர்ந்து ஏட்டுருவம் பெற்றதை இந்நூல் வரலாறு குறிப்பிடும். சித்த மருத்துவம், சோதிடம், மாந்திரீகம், ஆவணம் போன்ற பல்வேறு வகைப்பட்ட செய்திகளையும் ஓலைச்சுவடிகளில் எழுதியிருக்கின்றனர்.

பெற்றோரின் சொத்துகளை அவர்களின் வாரிசுதார்கள் பங்கு பிரித்து கொள்ளும் போது அவர்கள் பயன்படுத்திய- பாதுகாத்து வந்த சுவடிகளையும், சமமாகப் பிரித்துக் கொடுத்தனர்.

## ஓலை

எழுதப்பெற்ற ஓலையை எழுதிய நூலுக்கு பெயராக அமைத்து விட்டது. இதனை,

"ஒட்டித்தான் விடுத்த ஓலை உட்பொருள் உரைமிழ் என்ன".

(சீவக சிந்தாமணி 2143)

"ஓலைக் கணக்கர் ஒலியடங்கு புண்செக்கர்"

(நாலடியார் பா.397)

போன்ற சான்றுகள் மூலம் எழுதப்பட்ட நூல்களுக்கு ஓலை என்று பெயர் வழங்கப்பட்டது (Chockalingam, 1982; Puliyur Kesigan, 2010).

"ஒப்பமாய் உரைக்க வல்லான்

ஒருவனோர் ஓலை கொண்டு"

(சூளாமணி, 108)

"மட்டோலைப் பூவனையார் வார்ந்தோலை சேர்ந்தெழுதிப்

பட்டோலை கொள்ள பகர்ந்தோரும்"

(தமிழ் விடுதூது, 8)

இதில் செய்திகள் எழுதவும், தூதுவரின் செய்திகள் அனுப்பவும் இலக்கியங்களை எழுதி வைக்கவும் ஓலையைப் பயன்படுத்தினர் என்பதையும், அரசரிடம் ஓலையெழுதுவோர் என்னும் பணியாளர் இருந்தனர் என்பதையும் இவ்வடிகள் உணர்த்துகின்றன (Palarma Aiyar, 1918).

## அக்காலத்தில் ஓலைகள்

அக்காலத்தில் அரசர் கூறும் செய்தியை ஓலையில் எழுதுபவரைத் திருமந்திர ஓலை என்றும் அவர்களின் தலைவரை ஓலை நாயகம் என்றும் அழைத்தனர். ஓலைகள் சமூகத்தில் இடம் பெற்றிருந்த நிலையை சான்றுகளாக, அரசரின் செயல் நடவடிக்கைகளை எழுதுபவரை பட்டோலை என்றும் ஊர் நடவடிக்கைகளை அறிவிப்பவரை நீட்டோலை என்றும் அழைத்தனர்.

சோழ மன்னர்கள் ஆட்சியில் குடவோலை முறை தேர்தலுக்கு பயன்பட்டதையும் கூறுவார். ஆணை ஓலை, மூல ஓலை, படி ஓலை, முதலானவற்றைப் பாதுகாத்து வைக்குமிடம் ஆவணக்களரி என அழைக்கப்பட்டது. ஒருவரை அழைக்கும் செய்தியைக் கூறுவதற்கு ஓலை வந்துள்ளது என்றும், திருமண செய்திகளை முகூர்த்த ஓலை, மணவோலை என்று கூறுவர்.

## சீன ஓவியம்

இந்தியாவில் ஓலைச்சுவடிகள் பயன்படுத்தியதை கி.பி. 629-645 ஆண்டுகளில் வந்த சீனயாத்திரிகர்களும் கி.பி. 1030ம் ஆண்டில் இந்தியாவில் பயணம் செய்த மேலை நாட்டு யாத்திரிகர் அல்பெர்னியும் குறிப்பிடுகின்றனர்.

ஓலையில் எழுதுவதை உறுதிப்படுத்தும் வகையில் பல ஓவியங்களை சீனாவில் காண முடிகிறது. குறிப்பாக, சீனாவில் '**கராஸ்கர்**' (KARASHHAR) என்னும் இடத்தில் அமைந்திருந்த புத்தமத மடத்திலிருந்து ஓவியம் வரலாற்று முக்கியத்துவமானதாகக் கருதப்படுகிறது. கி.பி 10 ஆம் நூற்றாண்டை சேர்ந்த அந்த ஓவியத்தில் புத்தர் மற்றும் அவரது மாணக்கர்கள் எழுத்தாணி கொண்டு ஓலையில் எழுதுவதைப் போன்று இருப்பதைக் காண முடிகிறது.

## பனையோலைகள்

இந்தியாவில் எழுதுவதற்கு பயன்படுத்துவது அதிகமாக பனையோலைகளே ஆகும். பனையோலையே காலத்தால் மிகவும் பழமையானது. பனையோலையில் கி. மு ஐந்தாம் நூற்றாண்டில் புத்தமத ஜாதகங்கள் எழுதப்பட்டதாகவும், ஓலைகளில் எழுதும் வழக்கம் தென்னிந்தியாவிலிருந்து மற்ற பகுதிகளுக்குப் பரவியதாகவும் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

பனையோலைகள் சுமார் 500 ஆண்டுகளுக்கு மேல் அழியாத தன்மை கொண்டவை. அதிக செலவு இல்லாதவை. எல்லா இடங்களிலும் அதிகமாக எளிதாக கிடைக்கக்கூடியவை மற்ற இடங்களுக்கு எளிதில் எடுத்துச் செல்ல மிகவும் வசதியானது.

## ஓலைகளை பதப்படுத்துதல்

கீறல் எழுத்து எழுதுவதற்கு முதலில் பதப்படுத்தப்பெற்ற வெள்ளோலைகள் தயாரித்தல் ஏண்டும். பதப்படுத்துவதால் ஓலைகளில் மேற்புறம், எழுத்தாணியால் எழுதுவதற்கேற்ப அமைகிறது. பதப்படுத்தாத ஓலையினால் எழுத்தாணியால் எழுதும் பொழுது ஓலைகளில் உள்ள நரம்புகள் சேதமடையும். வெள்ளோலைகளைப் பதப்படுத்துதல் என்பது மிகவும் தேவையான ஒன்று. ஓலைகளைப் பதப்படுத்தும் முறையானது நாட்டிற்கு நாடு, இடத்திற்கு இடம் வேறுபடும்.

அவற்றுள் சில,

1. ஓலைகளை நீராவியில் வேக வைத்தல்.
2. ஓலைகளை அதிகம் காயாத வைக்கோல் போரில் வைத்தல்.
3. ஓலைகளைத் தண்ணீர் அல்லது பாலில் வேக வைத்தல்.
4. ஓலைகளின் மீது நல்லெண்ணைப் பூசி பதப்படுத்துதல்.
5. ஓலைகளை ஈர மணலில் அல்லது மண்ணில் புதைத்து வைத்தல்.
6. நான்கு அல்லது ஐந்து நாட்கள் மண்ணில் புதைஒத்து வைக்கப்பட்ட ஓலைகளைச் சுத்தம் செய்து தானியம் பாதுகாக்கும் குதிரினுள் உள்ள நெல்லுடன் வைத்தல்.
7. ஓலைகளை மஞ்சள் நீர் அல்லது அரிசிக் கஞ்சியுடன் ½ மணி முதல் 1 மணி நேரம் வேக வைத்தல்.
8. வெட்டப்பட்ட ஓலைகளை ஒன்றன்பின் ஒன்றாக அடிக்கி மிதமான வெப்பத்தில் 3 அல்லது 4 மணி நேரம் அன்னாசி மர இலைகளைச் சேர்த்து வேக வைத்து மூன்று நாள் இரவுப் பனியில் வைத்துப் பதப்படுத்துதல்.
9. வெட்டப்பட்ட ஓலைகளை நல்ல மரச்சட்டங்களுக்கு இடையில் 50 ஓலைகள் கொண்டு கட்டாகக் கட்டி 24 மணி நேரம் சூளையில் வைத்துப் பதப்படுத்துதல்.
10. ஓலைகளை நிழலில் காய வைத்துப் பின் அவ்வோலைகளைப் பசுவின் சாணம் கலந்த நீரில் மூழ்க வைத்துப் பின் காய வைத்துப் பதப்படுத்துதல்.
11. சுவடிகளை வழவழப்பாக்க கூழாங்கற்களைக் கொண்டு இருபுறமும் தேய்த்து வழவழப்பாக்கிப் பதப்படுத்துதல்.

## ஓலைச்சுவடியின் எழுதிய மொழிகள்

எழுத்தாணி கொண்டு எழுதும் ஓலைச்சுவடிகளில் வட்ட வடிவ எழுத்துக்கள் மட்டும் எழுதப்பட்டுள்ளன. தமிழ், கிரந்தம், மலையாளம், திகலாரி, நந்திநாகரி, கன்னடம், தெலுங்கு, ஒரியா, சிங்களம், பர்மியம் மற்றும் தாய் ஆகிய எழுத்துக்கள் எழுதப்பட்டது.

தொடக்கத்தில் தமிழ் எழுத்துக்களில் புள்ளி வைப்பதில்லை புள்ளி வைப்பதால் ஓலைகள் சேதமடையும் கி.பி. 1850க்குப் பிற்பட்ட சுவடிகளில் புள்ளி வைத்து எழுதியிருப்பதைக் காண முடிகிறது.

சரஸ்வதி மகால் நூலகத்தில் மிகப் பழமையான ஓலைச்சுவடி 10-ம் நூற்றாண்டைச் சார்ந்த '**பலவதி**' என்ற நூல் காணப்படுகிறது. பனையோலையில் எழுதும் வழக்கம்,

"துகள்தபு காட்சி அவையத்தார் ஓலை

முகடு காப்பு யாத்து விட்டாங்கு".

என்ற முறிப்பு பனையோலையில் எழுதும் வழக்கம் கலித்தொகை காலத்தில் ஒரு வழக்கில் இருந்ததைத் தெரிவிக்கும்.

## முடிவுரை

தமிழ்ச் சுவடிகளை அச்சிட்டு வெளியிடும் வழக்கம் வந்தபின் தமிழ்ச்சுவடிகள் இன்னும் அதிக வேகமாக அழியத் தொடங்கின எனலாம் காரணம் நூல்களைப் படிப்போர் ஓலைச்சுவடியிலிருந்து படிக்கும் வழக்கத்தைப் படிப்படியாகக் கைவிட்டுக் காகிதத்தில் அமைந்த அச்சு நூல்களைப் படிக்கும் நிலைக்கு மாறிவிட்டனர். எனவே ஓலைசுவடிகளைப் படிக்கும் பழக்கமும் படிப்படியாக மறைந்துவிட்டன. தமிழ் நூல்களை ஓலைகளிலோ, தாள்களிலோ, பிரதி செய்து வைப்போரின் எண்ணிக்கையும் குறைந்து விட்டது. இது தமிழ்சுவடிகளின் அழிவின் வேகத்தை மிகவும் துரிதப்படுத்தியுள்ளது.

இவற்றின் விளைவாகச்சுவடிகள் ஏதோ ஒரு விதமான அருங்காட்சியாகப் பொருட்களாக மாறிவிட்டன. தற்போது அழிந்து கொண்டிருக்கும் 75 விழுகாடு ஓலைகளில் என்ன எழுதி வைக்கப்பட்டுள்ளன என்று படித்து அறிபவர்களின் எண்ணிக்கையையும் குறைந்து கொண்டே வருகிறது. இதனால் எனது ஆய்வு முடிவாக முன்னோர்களின் அழிவு நிலையில் இருக்கும் நமது செல்வத்தை தேடி படிக்க கற்றுக் கொள்ளவோ அல்லது பாதுகாக்கவோ இன்றைய தலைமுறையினரை முயற்சி செய்யுமாறு பணிவுடன் நான் விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

## References

Chockalingam, V., Civaka Cintamani Ammanai, Saraswathi Mahal Noolagam, Thanjuvur, India.

Palarma Aiyar, Na., Sulamani vasanam, Ganesh Company, Chennai, India.

Puliyur Kesigan, (2010) Naladiyar, Saradha Pathippagam, Chennai, India.

Venkatachalapathy, A. R., (2018) U.Va. Saminathaiyar Kadithak Karuvoolam, U.Va. Saminathaiyar library, Chennai, India.

**Funding:** NIL
**Acknowledgement:** NIL
**Conflict of Interest:** NIL
**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License